இருமுடியில் முன்முடி தெய்வீகம் கருதியது; பின் முடி வழித் தேவை கருதியது. முன்முடியின் துணை முடியே பின் முடி. முன் முடியின் அர்ப்பணத்துக்கு உதவிடும் துணைப் பொருட்களின் தொகுதியே பின் முடி. ஐயப்பனை நெருங்க நெருங்கப் பின் முடியின் சுமை குறையும். முன்முடியின் சுவை பெருகும். இறை அபிஷேகம் கருதிய புனிதப் பயணத்தின் தவிர்க்க முடியாத சுயதேவைச் சுமைகளே பின்முடி. சுயதேவைச் சுமைகளின் தவிர்க்க முடியாத உன்னதத் தேவையே நிவேதனப் பொருள் தாங்கும் முன்முடி. இரண்டின் இசைவினை வாழ்வியல் பயணத்தில் உணர்த்தும் குறியீடே இருமுடி.



யானை மீது சபரிநாதனின் எழுந்தருளல்

## உ

### உதயணன்

கேரள நாட்டுப்புறப் பாடல்களில் ஐயப்பன் சரிதையில் வரும் கொடியவன்; கொள்ளைக் கூட்டத் தலைவன். சபரிமலை அருகே கரி மலையில் உதயணன் முகாம் இருந்தது. நிலக்கல் என்னும் வளமை மிக்க வணிகத் தலத்தைப் பன்முறை தனது உடைமையாக்கிக் கொள்ள முயன்றும் சாஸ்தாவின் தெய்வீக சக்தியால் தோல்வியையே சந்தித்தான். கரப்பான் பூச்சிகள் கூட்டமாக வந்து உதயணன் படையை விரட்டியதாகவும் செய்தி உண்டு.

உதயணன் கோட்டை கரிமலையில் இருந்தது. அதனை ஐயப்பன் கைப்பற்றினான் என்பது கன்ன பரம்பரையாக வழங்கும் செய்தி. அக்கோட்டையைக் கல்லிட்டுக் கடந்த நினைவாகக் கல்லிடுங் குன்றத்தில் பக்தர்கள் கல்லிட்டுச் செல்கின்றனர் என்பர்.

### உற்சவபலி

உற்சவபலி என்பது திருவிழாக்கால முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்று. சபரிமலை மண்டல காலத்தில் நிகழும் பத்து நாள் உற்சவத்தில், முதல் நாளும் இறுதிநாளும் நீங்கலாக எட்டு நாட்கள் இப்பலி நிகழும். ஸ்ரீ ஐயப்பன் பூதகண நாதன். அப்பூத கணங்கட்குத் திருப்படையல் உணவு தந்து திருப்திப்படுத்துவதும், அவ்வவற்றுக்குரிய இடங்களில் நிலைபெறுத்துவதும் இச்சடங்கின் நிகழ்வுகளாகும். திருப்படையலில் பூத கணங்கள் திருப்தி அடையாவிடில் அது பூசாரிக்குத் தீங்கு விளைவித்துவிடும். இத்தருணத்தில் இறைவனே முதலை உருக்கொண்டு பூசாரியைக் காத்தருள்கின்றான் என்பது நம்பிக்கை. முதலை உருவில் அர்ப்பணிக்கப்படும் திருப்படையல், அருந்தும் பக்தர்களின் வயிற்று உபாதைகளை நீக்க வல்லது. ஏழு முறை வலம் வந்து பூசாரி பலிக்கற்களில் திருப்படையலைச் சமர்ப்பித்தல் வழக்கம். எட்டாவது சுற்றில் விடுபட்ட பூத கணங்களுக்குத் திருப்படையல் சமர்ப்பணம் ஆகும். ஒன்பதாவது சுற்றில் க்ஷேத்திர பாலர்க்கு எஞ்சியவை முழுதும் படையலாகும். கோயில் பணியாளர்க்கு இப்படையலில் உரிமை உண்டு. தத்தம் உரிமைக்கேற்ப அவர்கள் பங்கீடு பெறுவர். உற்சவப் பலி நிகழ்த்த வரும் அர்ச்சகரை எவரும் தொடக்கூடாது; வலம் வருதலின் போது பயன்படுத்தப்படும் விளக்குகளில் ஒன்று கடவுளாகவே கருதப்படும்; மற்றொன்று அவரது பூசாரி என்று கருதப்படும். இவ்வாறு தரப்படும் சமமதிப்பு கருதற்குரியது.

### உற்சவம்

சபரிமலையில் மண்டல பூஜை காலத்தில் பத்து நாட்கள் திருவிழா நடைபெறும். யோகியான ஐயப்பனுக்கு விழாக்களில் பிரீதி இல்லை எனினும், மண்டல பூஜை காலத்தில் நிகழ்வதால் உகந்து ஏற்பார் என்பது நம்பிக்கை. முதல் நாள் நிகழும் கொடியேற்றம், ஒன்பதாம் நாள் நிகழும் சரங்குத்தி வேட்டை, மறுநாள் நிகழும் ஆறாட்டு போன்றவை குறிப்பிடற்குரியவை.

## எ

### எருமேலி

பல்வேறு இடங்களிலிருந்து பள்ளிக் கட்டுடன் புறப்பட்டு வரும் ஐயப்ப பக்தர்கள் எருமேலியில் ஒன்றாகக் கூடுவர். முன்பு போலல்லாது இப்போது எருமேலி வரையிலும் வாகன வசதியுண்டு. இங்கு ஐயப்ப பக்தர்கள் ஆடும் பேட்டை துள்ளல் மிகவும் பிரசித்தி பெற்றது. எருமேலியில் தரிசிக்க வேண்டிய இடங்கள் மூன்று: 1. கொச்சம்பலம் என்னும் சிறிய கோயில், 2. வலியம்பலம் என்னும் பெரிய கோயில், 3. வாவர் மசூதி. இம்மூன்று வழிபாட்டுத் தலங்களையும் இணைப்பது பேட்டைத்துள்ளல்.

எருமேலியை அடையும் அன்பர்கள் எருமேலித்தோட்டில் நீராடி அங்கு எழுந்தருளியிருக்கும் சாஸ்தாவை வழிபடுவர். வில்லும் அம்பும் ஏந்திய வேட்டைக் கோலத்தில் அமைந்தது சாஸ்தாவின் திருவுருவம். எருமேலி சாஸ்தா கோயில் தேவஸம் போர்டின் மேற்பார்வையில் உள்ளது.

### எருமேலிப்பாதை

சபரிமலைக்குச் செல்லும் மூன்று வழிகளில் முக்கியமானது.